Written by Administrator
Saturday, 27 June 2009 09:04 - Last Updated Saturday, 27 June 2009 09:13

□□□□□□□□ **27.06.2009**

10 லட்ச ரூபாய்க்கு மேல் திட்ட பணியா? இனி 'இ-டெண்டர்' மூலமே விண்ணப்பம்

■ நமது சிறப்பு நிருபர் ■

தமிழகத்தில் நகராட்சிகளில் திட்டப் பணிகளின் மதிப்பீடு 10 லட்ச ரூபாய்க்கு அதிகமாக இருந்தால், இனி, இ-டெண்டரில் தான் விண்ணப்பிக்க வேண்டும்.

நகராட்சிகளில் வளர்ச்சி பணிகள் செய்வதற்கு டெண்டர் கோரப்படும். அங்கீகாரம் பெற்ற கான்ட்ராக்டர்கள் பணி செய்வதற்கு, சம்மந்தப்பட்ட அலுவலகங்களில், 'ஷெட்டியூல்' படிவம் பெற்று பூர்த்தி செய்து, டெபாசிட் பணத்திற்காக தேசிய சேமிப்பு பத்திரம் இணைத்து டெண்டர் பெட்டிகளில் போடுவது நடைமுறையில் உள்ளது.

இதில், சிலருக்கு மட்டும், 'ஷெட்டியூல்' வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு 'ஷெட்டியூல்' கைக்கவில்லை, கடைசி நேரத்திற்கு பின்னும் டெண்டர் பெறப் பட்டது என பரஸ்பர புகார்கள் எழுந்தன.

தற்போது, நகராட்சிகளில் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி கோரும் வகையில், 'இ-டெண்டர்' முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

பத்து லட்சம் ரூபாய்க்கும் மேற்பட்ட அனைத்து வேலைகளுக்கும் டெண்டர் அறிவிப்பாணை நகராட்சி வெப்சைட்டில் வெளியிடப்படும்.

கான்ட்ராக்டர்கள் நகராட்சி வெப்சைட்டில் டெண்டர் விவரங்களை அறிந்து, அதில் உள்ள படிவங்களில் பூர்த்தி செய்து, மெயிலில் அனுப்பி விடலாம். பூர்த்தி செய்து அனுப்பிய ஷெட்டியூல்களை திரும்ப பெற முடியாது.

டெண்டர் போடுவதற்கு குறிப்பிட்ட நேரம், கடைசி நாள் என நிர்ணயிக்கப்பட்டிருக்கும். அந்த குறிப்பிட்ட நேரத்திற்குள் விண்ணப்பித்தால் தான் டெண்டர் ஏற்றுக்கொள்ளும். ஒரு நிமிடம் தாமதமாக விண்ணப்பித்தாலும் மெயில் சென்றடையாது.

அனுப்பிய டெண்டர்களை, பொறியாளர், கமிஷனர் மட்டுமே பார்க்கும் வகையில் ஏற்பாடுகள் செய்துள்ளனர். புதிய இ-டெண்டர் நடைமுறைக்காக நகராட்சி கமிஷனர்கள், பொறியாளர்கள் மற்றும் பதிவு செய்த கான்ட்ராக்டர்களுக்கு தேசிய தகவல் தொடர்பு மையம் சார்பில், 'டிஜிட்டல்' கையெழுத்துடன் கூடிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அடையாள அட்டையை, 'கார்டு ரைட்டரில்' பொறுத்தி, கம்ப்யூட்டருடன் இணைத்தால், டெண்டர் விவரங்களை டவுன் லோடு செய்யவும், டெண்டர் அனுப்பவும் முடியும்.

இப்புதிய நடைமுறைக்காக 10 லட்ச ரூபாய்க்கு மேல் திட்ட வேலை செய்யும் கான்ட்ராக்டர்களை புதிய அடையாள அட்டை பெற வலியுறுத்தப்பட்டுள்ளது.